# போர்வாள்

கலை உரைத்த
கற்பனையே
நிலை எனக்
கொண்டாடும்
கண்மூடி
வழக்கமெலாம்
மண்மூடிப்
போக!

—வடலூர் இராமலிங்க அடிகள்.

ர்கள்: காஞ்சி, மணிமொழியார்
இளஞ்செழியன், B.A. (Hons.)

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 1½
வெளிநாடு அணா 2

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு ௧௯௭௯
தை ௧௮
31—1—48 சனிக்கிழமை

வீச்சு 24


## நேற்று!

ட அப்பா! கண்டுபிடித்து
ர்கள்! தமிழ்நாடு தமிழருக்
ஏன், எலிவளை எலிகளுக்கு
று கூவுவதுதானே! கரை
புற்று கரையான்களுக்கே
முழங்குவதுதானே! குரு
ண்டு குருவிகளுக்கே என்று
கரிப்பதுதானே! நத்தை
நத்தைகளுக்கே என்று பேசு
னே! தமிழ்நாடு தமிழருக்கே
று எக்காளமிடுகிறார்களே,
யாருக்காம் தமிழ்நாடு!
கிறார்கள் தள்ளுங்கள், யார்
கிறார்கள் இவர்கள் பேச்சை!
ம் பொய்! எல்லாம் புரட்டு!
வேஷம்! வடநாட்டுச்
டலாவது, கத்தரிக்காயாவது
தயாவது சொல்லி காங்கி
த் தூற்றுவதுதானே இந்த
மானுக்களின் வேலை! இவர்க
து! தமிழர்களாவது! தமிழ
ன்று கூறி, தலை நிமிர்ந்து
று, இந்தியாவைக் காட்டிக்
க்கும் தேசத்துரோகிகள்
கள்!

—'தேசியத் தமிழன்' நேற்று.

## இன்று!

"மாட்டை வண்டியில் பூட்டும் போது எசமான் மாட்டின் கருத்தைக் கேட்பதில்லை. அதுபோன்றே காங்கிரஸ் மேலிடத்தார், தமிழகத்தின் கருத்தை அறியாமலே, அதை மத்திய சமஷ்டியில் பிணைத்துவிட்டனர். வட இந்திய முதலாளித்துவ நுகத்தடி தமிழகத்தின் கழுத்தை அழுத்தி வேதனைப் படுத்துகிறது.

"இந்தக் கட்டாய அடிமைத் தனத்திலிருந்து விடுபட்டு தமிழகம் தனிநாடாகவேண்டும்; தமிழர் தனியரசு செலுத்தவேண்டும்.

"உறவுக்கு எல்லை இமயம். உரிமைக்கு எல்லை வேங்கடம். சுதந்தரத் தமிழ்நாட்டில் சுதந்தரத் தமிழரசு. 'இதுவே நம் இலட்சியம். இதைவிட்டு கண்ணை மூடிக் கொண்டு திராவிடம் திராவிடர் திராவிடநாடு என்று சொல்வதெல்லாம் தமிழ் இனத்தைப் பிற இனங்களுக்குக் காவு கொடுப்பதாகவே முடியும்." "தமிழ்நாடு தமிழருக்கே! தமிழ்நாடு தமிழருக்கே! தமிழ்நாடு தமிழருக்கே"

—தேசியத் தமிழன், இன்று.

## நாளை!

ஐக்கிய திராவிடம் ஏற்பட்டே தீரவேண்டும். தென்னாட்டு சமஷ்டி கட்டாயம் வேண்டும். டில்லி ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியிலிருந்து நம் நாடு விலகி நின்று தனியாட்சி செலுத்தவேண்டுமானால் தென் இந்திய சோஷலிசக் குடியரசு உடனடியாக ஏற்பட்டாக வேண்டும்.

தமிழகம் ஆந்திரம் மலையாளம் கன்னடம் நான்கு மாகாணங்களும் நான்கு நாடுகளாக மாறி, இந்த நான்கு நாடுகளும் ஒன்றுசேர்ந்து ஒரு கூட்டரசு அமைப்பதே இன்றைய அவசரமும் அவசியமுமான தேவையாகும்.

திராவிடநாடு திராவிடருக்கே என்று பல ஆண்டுகளுக்கு முன் எழுந்த குரல் பிற்போக்குக் கும்பலிடமிருந்தும் தேசத் துரோகிகளிடமிருந்தும் எழுந்ததால் அது மதிப்பில்லாமல் போய்விட்டதே தவிர அது மிக மிக நியாயமான கோரிக்கை என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. திராவிடநாடு திராவிடருக்கே!

—தேசியத் தமிழன், நாளை.

மிழ் வெல்க வெல்க என்றே தினம் பாடு

# தமிழ்நாட்டில் திருடர்கள்

"தமிழ் ஒளி"

**1**

சிதம்பரத்தில் நடராஜர் ஆல யத்தில்
செம்பொன்னுல் செய்திருக்கும் நந்தி யின்வால்
எதனுலோ ஒடிந்துவிட ஓடோ டிப்போய்
இரண்டே கால் கோடியினைச் செலவழிப்பார்
முதலாளி அழுகப்பர்; ஆனுல் ஆலை
மூடியதால் கூழின்றி நோய்வாய்ப் பட்டுக்
கதறுகிற தொழிலாளர் தமக்குச் செல்லாக்
காசையுமே தருவதற்கும் ஒப்ப மாட்டார்!

**2**

திருப்பதியி லிருக்கின்ற கடவு ளுக்குச்
சிலைமுடியில் பனிபட்டால் சளி பிடித்து
வரும் காய்ச்சல் எனப்பயந்து பக்தர் கூட்டம்
வைரமுடி தனைச்செய்து மாட்டும்! அந்தோ
தெருப்புழுதி தனில்அவர்கள் வீட்டின் முன்னே
சிரங்கினின்று சீழொழுகச் சொரி பிடித்து
வருத்தமுற்றுக் குளிராலே ஆடை யின்றி
வாடுகிற மனிதர்களைத் திரும்பிப் பாரார்!

**3**

'கும்பாபி ஷேகம்' எனச் சொல்வார்; கோயில்
குளமெடுக்க மிகுந்த தொகை செலவழிப்பார்!
கும்பியிலே பசிநெருப்பு மூண்டெ ரிக்க
குழந்தைகளும் மனைவியரும் துடிக்க ஏழை
தெம்பின்றி விழுந்திடுவான் அவர்கள் முன்னே!
'செய்தவினை' 'விதி'யென்றே சொல்லி விட்டு
எம்பிரான் நாமத்தை ஜெபிப்பார் மூடர்
இன்ன இவர் மனிதர்களாம் வாழு கின்றார்.

**4**

இவ்வாறு செய்கின்ற இவர்க ளெல்லாம்
இருட்டுகிற நேரத்தில் ஏழைப் பெண்கள்
செவ்வையுறு கற்பழித்துத் திரிவார்; மிக்க
திண்டாடும் தொழிலாளர் தமக்கு நன்மை
எவ்விதத்தும் செய்துதர ஒப்பார்; நாட்டில்
இருக்கின்ற மடமையினுல் கடவுள் பேரால்
'திவ்வியர்கள்' 'புண்ணியர்கள்' எனப்பேர் பெற்றுத்
திரிகின்றார், திருடரிவர்! அறிந்து கொள்வீர்!

## யம் அழைக்கிறது! செவி கொடுங்கள் அவ்வழைப்பிற்கு!

பக்கம் தொடர்ச்சி)
வத்திலோ சோஷ
கட்சியின் நோக்
லோ பாதிக்கப்பட
அவர்களுடைய
மதியை (அது நம்
க்கு மாறுபட்டது
லும்) புறக்கணிப்
என்பது சுலபமான
மாக இதுவரை இருந்
ல்லை; இப்பொழுதும்
"

—[ஜனதா 25-1-48]

தல்" பகுதி :
கிரசில் முதலாளிகளின்
வலுத்தலு;—வலுத்து
.

கிரசை என்றைக்கே
உண்மையான உழைப்
ன் கட்சியாக மாற்ற
என்பது கேள்வி.
விடை நிச்சயமற்ற
ருக்கிறது. என்னைப்
தவரை அது சாத்திய
படவில்லை.

அடிப்படையில் பார்
சோஷலிஸ்டுகள் காங்
தொடர்ந்து இருப்பது
என்றே தோன்று
வெளியேறி காங்கிரசுக்கு
சியாக வேலை செய்
சிறந்தது என்றும்
கிறது. ஜனநாயகம்
ற இது அத்தியாவசி
—ஜெயப்பிரகாஷ்.

கடமை' எனும் கட்

—கடமை இரண்டு
ளும் மாறி மாறித்
ன்றன காங்கிரஸ்
ள் உள்ளத்தில். காதல்
நெஞ்சில் பாய்ந்திடும்
என்ன இருந்தாலும்
சக் கைவிடுவதா என்ற
ம், கடமை உணர்ச்சி

மேலிடும் சமயம், எதிர்க்கட்சி அமைத்தேனும் மக்கள் நலனைக் காப்பதே இனி வேலை என்ற உறுதியும் பிறக்கிறது அவர்கட்கு.

இந்த "இரண்டுங் கெட்டநிலை" மாறவேண்டும். ஒன்று, நாட்டின் நலனுடன் அல்லது காங்கிரசின் நலனுடன் அவர்கள் இரண்டறக் கலந்துவிட வேண்டும். இதுவும் வேண்டும்; அதுவும் வேண்டும் என்ற போக்கு இனி கூடாது. இதுவா அதுவா என்பது முடிவுகட்டப் பட்டாகவேண்டும். ஏனெனில் இதுவும் அதுவும் ஒட்டாத சரக்குகள். இரண்டையும் ஒட்டப் பார்ப்பது இனி நடவாது. இதன் வளர்ச்சி அதன் அழிவு. அதன் வளர்ச்சி இதன் அழிவு. அப்படியாயின், இரண்டையும் ஒருங்கே போற்றி வளர்ப்பதென்பது எப்படி முடியும்?

சோஷலிஸ்டுகள் மட்டுமல்ல, தென்னாட்டில் உள்ள "**இன உணர்ச்சி படைத்த தேசியத் தமிழர்கள்**" இருக்கிறார்களே, தமிழருக்கும் சுய நிர்ணயம் என்று முரசு கொட்டுபவர்கள், அவர்களும் இரண்டில் ஒன்று என்ற முடிவிற்கு விரைவில் வந்தாக வேண்டும். காங்கிரஸ் ஒரு முதலாளித்துவ அமைப்பு என்பது மட்டும் அல்லாமல், அது ஒரு வடஇந்தியர் மன்றம் என்பதும் இந் நாள் தெள்ளத் தெளிய விளங்கிவிட்டது. வடஇந்தியாவுக்கு ஆதிக்கம் வளரவும் தென் இந்தியாவிற்கு அடிமைத்தனம் வளரவும் பாடுபடுவதே அதன் இலட்சியம் என்பதும் சென்ற ஓராண்டின் அரசியல் நிகழ்ச்சிகள் வாயிலாக நன்கு தெரிந்துவிட்டது. தெரிந்த பின்னரும் அதே வடஇந்திய முதலாளித்துவ அமைப்பில் "தேசியத் தமிழர்கள்" இருப்பது, மேலும் மேலும் வடக்கு, தெற்கை அடிமைப்படுத்த உடந்தையாய் இருக்கும் குற்றத்தை அவர்கள் மீது சுமத்துமே தவிர வேறில்லை.

**சுதந்தர சோஷலிசத் தமிழ்க் குடியரசே என் இலட்சியம்** என்று ஒரு நாளைக்கு மீசையை முறுக்கிக் கொண்டு பேசுவதும், இல்லை—இல்லை—நான கேட்பது ஐக்கிய இந்தியாவினின்று தனித்துப் போகும் தமிழகம் அல்ல, அதனோடேயே இணைந்திருக்கும் தமிழ்நாடுதான் என்று அடுத்த நாள் விளக்கவுரை பகர்வதும், "நான் கேட்பது மாகாணம் அல்ல—நாடு; நாடு அல்ல—மாகாணம்; மாகாணம்தான்—ஆனல் அந்தச் சொல் எனக்குப் பிடிக்கவில்லை—ஆகவே நாடு என்று சொல்கிறேன்" என்று இன்னொரு நாள் சொற்களை அடுக்கிக் காட்டி செப்பிடுவித்தை செய்வதும் ஒருக்காலும் தமிழகத்தை உய்விக்கும் வழிமுறைகள் ஆகமாட்டா. ஐக்கிய இந்தியா என்று சொல்லப்படும் இந்திய யூனியனோடு **எந்தவகைய தொடர்பும் அற்ற** முழு சுதந்தரத் தனிநாடு தமிழ்நாடு என்பதை தலைநிமிர்ந்து கூறவேண்டும். அத்தகைய தனிநாடு அமைவதை முழு மூச்சுடன் எதிர்த்தே தீர வேண்டிய வடஇந்தியக் காங்கிரஸ் அமைப்பினின்று உடனே வெளியேறிவிட வேண்டும். இந்த இரண்டையும் செய்யாத வரையில் சிவஞான கிராமணிகளின் குரலிலே எவ்வளவுதான் **வன்மை** இருந்தாலும் **தெளிவு** இருக்கமுடியாது. அத்தகையவர் காங்களிலே காணப்படும் 'தமிழ் முரசு'கள் எழுப்பும் ஒலி என்னதான் ஓங்கி முழங்கி

னாலும், அந்த ஒலியிலே ஓசை இருக்குமே தவிர தமிழின் வீரத் திறம் இருக்காது.

கம்பங் கொல்லையிலே கம்பு தான் விளையும், தினை விளையாது. தினைப் புனத்திலே தினைதான் விளையும்; கம்பு விளையாது.

காங்கிரசின் இன்றைய அமைப்பிலே முதலாளித்வம் தான் வளரமுடியும்; வடநாடு தான் ஓங்கமுடியும். சமதர்மம் வளரமுடியாது; தென்னாடு ஓங்கமுடியாது.

இவை நடைமுறை உண்மைகள். இவற்றை மறப்பது மன்னிக்கமுடியாத குற்றம்; மறைப்பது நாட்டுக்குத் துரோகம்; மறுப்பது கோமாளித்தனம்; அல்லது, பிறரை, எது சொன்னாலும் நம்பும் ஏமாளிகள் என்றெண்ணும் உலுத்தத்தனம்.

நெடுநாள் பழகிய நட்புணர்ச்சி சோஷலிஸ்டுகளையும் சிவஞானங்களையும் காங்கிரசின்பால் ஈர்க்கும். அது இயற்கை. ஆனால் அந்த உணர்ச்சி வயத்தராகி அவர்கள் நாட்டைக் காட்டிக் காடுக்க முனைவராயின் அதை விடக் கேடு வேறொன்றில்லை.

காதல சிறந்ததுதான். ஆனால், காதல், கடமையை நிறைவேற ஒட்டாது தடுக்கும் முட்டுக் கட்டையாக மாறுமாயின் காதலை உடைத்தெறிந்து கடமையை நிறைவேற்றுவதே உண்மைத் தொண்டரின் வழிமுறை.

காங்கிரஸ், காதல் எனும் வலை போட்டு இழுக்கிறது கிராமணிகளையும் சமதர்மிகளையும். அந்த வலைக்குள் சிக்கி நாட்டுக்கு ஆற்ற வேண்டிய கடமையை மறக்கக் கூடாது அவர்கள்.

புரூடஸ், ரோம் வாழ, நண்பன் சீசரை இழக்கத் துணிந்தான். தமிழகம் வாழ காங்கிரசை இழக்கத் துணிவார்களா கிராமணிகள்? ஏழைகள் இன்புற "தேசிய திருச் சபை"யை உதறித் தள்ள முன் வருவாரா காங்கிரஸ் சமதர்மிகள்!

கடமைக்காக காதலை இழப்பது பெரிய தியாகம்தான். அதை புரூடஸ் அன்று செய்து காட்டினன். காதலா கடமையா என்ற சிக்கலை அறுத்து, மக்கள் வாழ, மமதை மடிய, குடியாட்சி மேலோங்க, தன் நண்பரை வலிய இழந்தான். சேக்ஷ்பியரின் உயிரோவியத்தில் என்றும் மங்காத இடமும் பெற்றுவிட்டான்.

சிவஞானங்களே! ஜெயப்பிரகாஷ்களே! அதோ வீரன் புரூடஸ் காட்டிய நேர் வழி. அவ் வழி செல்லுங்கள். நாட்டையும் வாழவிடுங்கள். முதலாளித்வ அமைப்பைவிட்டு வெளியே வாருங்கள். மேலும் மேலும் அதற்கு ஆக்கம் தரும் விதத்தில் நடவாதீர்கள் — தாங்கரிய பழி தன்னைத் தாங்காதீர்கள். **காதல் அல்ல பெரிது—கடமை. கட்சி அல்ல பெரிது—நாடு.** இந்த முடிவிற்கு உடனே வாருங்கள்; நாட்டையும் முன்னேற்ற வாருங்கள். இனியும் மயங்கி நிற்பது நன்றன்று. மயக்கமும் தயக்கமும் நாட்டு நலி தீர்க்காது. சமுதாயம் உங்களைக் கூவி அழைக்கிறது பணியாற்ற. செவி கொடுங்கள் அவ் அழைப்பிற்கு.

---


**போர்வாள்**

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனிப்படி | 0-1-6 | 0-2-0 |
| ஆண்டுத் தொகை | 5-0-0 | 6-8-0 |

147, பவழக்காரத் தெரு, சென்னை.


(5-ம் பக்கத் தொடர்

அச் சிலைகள் சிலைகளே... ளல்ல என்ற முடிவுக்கு... நெருங்கிச் சென்று அ... கண்டு களிப்புற எண்ணி...

திரும்பி அவை இருந்த... நோக்கிச் சென்றாள்.

கிட்டே நெருங்கினாள். வியப்பு! ஆண் சிலை ... கண்டாள். அது எழுந்து... அருகிருந்த வண்ணத் தட்... வண்ணங்களைக் குழைத்... னமே செதுக்கப்பட்டிருந்... ரத்தை அழகுபடுத்தக் கண்...

அவள் எண்ணினாள்: எண்ணியவாறு, அந்தக் க... சிலையல்ல. பெண்தான்...

அவள் கண்டாள். கண்டான்.

"உட்காருங்கள்"—செ... செய்கை முன்னுரை.

"இல்லை நேரமாய் ... நான் சென்று வருகிறேன்... அவளின் முடிவுரை.

வீடு திரும்பிக் கொண்... அவள் எண்ணினாள்: "இ... பெண் மீது சாய்ந்து இரு... பார்த்ததும், அந்தப் பெண்... டக்காரி என்று எண்ணி... அந்தப் பெண்ணே சிற்பம்... டமற்றது!" நடந்து வீடை...

நாட்கள் பல கடந்து ... கருங்கல் ஒன்று கன்னியி... வமைந்து நின்றது. செழி... துக்கிக் கொண்டிருந்தான். நின்றிருக்க அவளைப்பார்த்... அவன் செதுக்கிக்கொண்டி... நாள் தோறும் நடந்துவந்...

இருட்டுகிற நேரத்திலே... டுமா' என்பாள். 'சரி' ... பான் செய்கையால். வீ... செல்லும்போது எண்ணி... "அன்றொரு நாள் பெண்... யின் தோளிலே சாய்... வரைக் கண்டேன். பெ... ஒரு சிலை. எனக்கிவர் ... தால்........என்றெண்ணி... இப்போது நான் அதிர்ஷ்... தான்." இந்த எண்ணம் ... மூச்சொன்றில் எதிரொலி... அந்த செவ்வதரங்களின் ... விலே பிரதிபலித்தது. அவ... மெல்லிய இதழ்கள் "... நானே! ஒளி நீயே!" பாட்டை வெளித்தள்ளிக் டிருந்தது.

(அடுத்த இதழில் முடி...

# ஊமைச் சிற்பி

உடுமலை ஜெயராஜ்

...னது சுருண்ட கூந்தல் மெல் ...இளங் காற்றின் வழியே ...தசைந்து ஆடியது. அந்த கூந்தல் அரும்பியிருந்த ...வத் துளியை அணைத்துக் ...டது. முன்னமே கறுத் கூந்தல் வியர்வையின் ...சயால் இன்னும் சிறிது ...த்து. வழித்தெறிந்தான் ...வயை. எதிரொலித்து ...கொண்டிருந்த அந்த 'டக்—...ன்ற சப்தம் மீண்டும் ...கிற்று. அவன் ஒரு சிற்பி. ...ள்ளத்திற்பட்டதை சிறுத்த ...ண்டு செதுக்குபவன். சிலை ...ற்குக் கருப் பொருளாக ...தற்கள் அவனைப் பாராட் ...ய்; அவனது உள்ளம் ...சீராட்டும் தந்தை; உளி ...யும் அவன் நலம் பேணும் ...க்கள். 'டக்—டக்'—இது ...வாழ்வின் இசை.

...வடித்த சிலைகள் காவியம் ...றும். கவிதைகள் பல ...ஆனால் அவன் பேச ...

...செதுக்கிய அந்தச்சிற்ப ...என்ன என்னவோ ...ஏதேதோ, வார்த்தை ...ளிபிடும். அந்தக் கருங்கல் ...ன் அசைவிலே அழகு ...தெளிக்கப் பட்டிருக் ...ம்பி செழியனின் கருத்த ...வினுக்கு அசையும். ...ஊமை. பேசும் சிலைகள் ...க்கும் செழியன் ஒரு ...உயிரோவியங்கள் பல ...ம் செழியன் ஒரு மூங்கை.

...ஓதுக்குப் புறம் ஒன்றில் ...சிற்பக் கூடம். வானிலே ...லா வட்டமிட்டால், இரவு, ...டு மணிக்குக் கூட ...லைகள் வடித்துக் கொண் ...ா. நகர் மக்களிடம் ...கலந்து பழகியதில்லை. ...அவனிடம் கலந்து பழக ...ள். கலைக்கோட்டத்தின் பக்கம்வர அஞ்சுவர் நகர மக்கள். இவனது 'டக்—டக்' சப்தம் அவர்களுக்குப் பேயின் நடனமாகப் பட்டிருக்கும்.

மாலை நேரம், அரவம் எதுவும் இல்லை. நேரங்கழித்துப் பள்ளிக்கூடம் சென்ற பையன் தயங்குவது போல இரவு தயங்கும் நேரம். அந்த நேரத்தில்தான் செழியன் சிலை ஒன்று வடிக்க எண்ணமிட்டுக் கொண்டு இருந்தான். கற்பனைக்காகக் காத்துக் கிடந்தான். கண்கள் எங்கோ புரண்டு கொண்டிருந்தன.

அல்லிக்கொடி ஒன்று அசைந்தாடிவரக் கண்டான். மல்லிகை மணம் சூழ்ந்து கமழ்ந்தது. "அல்லி மலருக்கு மல்லிகை மணமா? அதிசயம்" என்றான்.

தாமரை மலரொன்று கண்டான். "தாவிக் குதித்திடும் வண்டினம் ஏதும் காணோம்—ஆச்சரியம்" என்றான். அதனுள் இரு குமுத மலர் குவிந்திருக்கக் கண்டான். கொவ்வைக் கனியொன்று கண்டான். "மலருள் மலரா? மலருள் கனியா?" என்றான்.

கிட்ட நெருங்கிய அவனை எட்டிப் பிடித்திட்ட அவன் பார்வைக்குப் பட்டதெல்லாம் முகமும், முழுத்தோற்றமும். "அல்லிக் கொடியல்ல, அவள் ஒரு பெண்" என்றான். "தாமரையல்ல—அது அவள் முகம்" "குவிந்த குமுத மலரல்ல—கண்கள் அவை" என்றான். "கொவ்வைக் கனியல்ல—அவை இதழெ"ன்றான்.

கழுத்திலிருந்து கருநாகம் ஒன்று தொங்கி நெளியக் கண்டான்; "ஐயோ, கடித்து விட்டால் பளிங்கு மேனி கருகிவிடுமே" என்று எண்ணினான். ஐந்து மலர்கள் அந்த நாகத்தை அணைத்திடக் கண்டான். "அட! அது சடை! பற்றியெடுக்கிறாள் பாவை" என்றான்.

அந்த அல்லிக் கொடியைக் கல்லிலே கண்டு மகிழ விரும்பினான். மனதிலே எண்ணிப் பார்த்தான் அவள் தோற்றத்தை. பதியவில்லை. பாவையைப் பார்த்தான். அதற்குள் அவள் அந்த இடத்தை விட்டு, தாண்டிச் சென்று விட்டாள் என அறிந்தான். உலவ வந்திருப்பவள் ஊருக்குச் செல்லத்திரும்பத்தானே வேண்டும், என்று காத்திருந்தான். மரத்துப்போன காலை மடக்கி அவன் இதற்கு முன்னே வடித்திருந்த வடிவழகியின் சிலையொன்றின் தோளிலே சாய்ந்தான்.

* * *

அவள் உள்ளம் கூறிற்று. "இந்த இடம் நல்ல இடம். உலவ இனி இங்குதான் வரவேண்டும். நகரை விட்டு நாலு கல் வந்து விட்டாய்·காத்துக்கிடக்கும் உன் தந்தைக்கு காட்சியளிக்கத் திரும்புவாய்."

திரும்பினாள். நடந்தாள். மீண்டும் சிற்பி செழியன் இருந்த இடத்திற்கு வந்தாள். அந்த இடத்தைத் தாண்டிக் கூட இரண்டு அடி எடுத்து வைத்து விட்டாள். பின் என்னவோ எண்ணினாள். திரும்பிப் பார்த்தாள். வடிவழகன் ஒருவன் தன் தோளிலே சாய்ந்திருக்க மங்கை யொருத்தி அழகிய மலரொன்றை அவனிடம் நீட்டும் அரிய காட்சியினைக் கண்டாள்; இருவரின் அழகும் அவள் உள்ளத்தைப் பறித்தன. மணவாளன் அருமை கண்டாள். மனம் பூரித்துப் போனாள். அவனை அறியாமலே அவள் வாயினின்று சொற்கள் உதிர்ந்தன: **அந்தப் பெண் அதிர்ஷ்டக்காரி!**

மேலும் சிறிது நடந்தாள், நடந்தாளா, இல்லை நகர்ந்தாள். அழகுக் காட்சி அவளை வேகமாக நடக்க விடவில்லை. மெதுவாக ஊர்ந்து போகவே அனுமதித்தது.

சில கெஜ தூரம் வந்ததும் புத்தரைக் கண்டாள். மேலும் கொஞ்சம் தொலைவு. நாட்டியமாடும் நங்கை ஒருத்தி தன்னையே உற்று நோக்கக் கண்டாள். அவளை நெருங்கினாள். சிலை என்றறிந்தாள். புத்தரிடம் சென்றாள்—சிற்பம். எனவே முதலில் கண்ட மங்கையும அவள் தோளிலே உறங்கும் அழகனும் உயிருடன் உள்ள ஆட்கள் அல்ல—உயிரோவியச் சிலைகள் என்று முடிவு கட்டினாள். கல்லை வெட்டி, உயிருண்டாக்கிய சிற்பியைப் புகழ்ந்தாள்.

(4-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்

**31—1—48**

## காதலா, கடமையா, எது முதன்மை?

**புரூடஸ் :**

“இந்த மன்றத்தில் சீசரின் உயிருக்குயிரான நண்பன் எவனேனும் இருந்தால் அவனுக்குச் சொல்கிறேன், சீசர்மீது எனக்கிருக்கும் ஆசை அவனுடையதைவிடச் சற்றேனும் குறைந்ததன்று.

“அப்படியானால், புரூடஸ், சீசர்மீது சீறிப் பாய்ந்தானே சிறுத்தை என—ஏன் அது? என்கிறான் அந் நண்பன், இதோ என் விடை.

“நான் சீசரைக் கொன்றேன். ஆம்! அது உண்மை. ஆனால் அதற்குக் காரணம் சீசர்மீது எனக்கிருந்த பற்று குறைவு என்பதல்ல—ரோம் மீது எனக்கிருந்த பற்று அதிகம் என்பதே.

“சீசர் என் உயிர்த் தோழன் தான். ஆனால் ஒன்று கேட்கிறேன் உங்களை. சீசர் உயிருடன் பவனிவர நாம் அனைவரும் அடிமைகளாக உலவுவதை விரும்புகிறீர்களா அல்லது சீசர் இறந்துபோக, நாம் எல்லோரும் விடுதலை வீரர்களாக வாழ்வதை விரும்புகிறீர்களா, நீங்களே சொல்லுங்கள்.

“சீசர் என்னை நேசித்தான்.—அதற்காக அழுகிறேன். அவன் வெற்றி வீரனாக விளங்கினான்—அதற்காக மகிழ்கிறேன். அவன் அஞ்சா நெஞ்சன் என ஒளி வீசினான்—அதற்காகப் போற்றுகிறேன். ஆனால் அவன் சர்வாதிகாரத்வம் செய்ய எண்ணினான்—அதற்காக அவனைக் கொன்றேன்.

“அவன் அன்பிற்காக என் கண்ணீர்! அவன் வெற்றிக்காக என் களிப்பு! அவனுடைய அஞ்சாமைக்காக என் போற்றுதல்! ஆனால் அவனுடைய சர்வாதிகாரத்வத்திற்காக என்னுடைய வாள்வீச்சு!

“அடிமை வாழ்வை நச்சுகிற அளவுக்குத் தாழ்ந்த உள்ளம் படைத்தவர்கள் இங்கே யார் இருக்கிறார்கள்? இருந்தால், சொல்லுங்கள், அவர்கள் உள்ளத்தை நான் புண்படுத்திவிட்டேன் என்பதைக் கண்ணியமாக ஒப்புக்கொள்கிறேன்.

“ஓர் உண்மையான ரோம் நாட்டுக் குடிமகனாக இருக்க விருப்பமில்லாத இரும்பு நெஞ்சுடையார்கள் இங்கே யார் இருக்கிறார்கள்? இருந்தால் சொல்லுங்கள். அவர்கள் உள்ளத்தை நான் புண்படுத்திவிட்டேன என்பதைக் கண்ணியமாக ஒப்புக்கொள்கிறேன்.

“தான் பிறந்த பொன்னாட்டை மறக்கும் அளவுக்கு
மரத்துப்போன உள்ளம்
தவர்கள் இங்கே யார்
றார்கள்? இருந்தால்
லுங்கள். அவர்கள் உள்
நான் புண்படுத்திவிட்டே
பதைக் கண்ணியமாக
கொள்கிறேன்.

“சொல்லுங்கள்
விடையை எதிர் பார்க்
ஒளிக்காமல் சொல்லுங்

**மக்கள் :**

இல்லை, புரூடஸ்,
அத்தகைய கோழைகள்
ளிடையே யாரும் இல்லை

**புரூடஸ் :**

“அப்படியானால் நா
உள்ளத்தையும் புண்
வில்லை; சீசருக்கு எ
துரோகமும் செய்
ரோமாபுரியின் நன்
எந்தக் கூரியவாளை என்
தோழன் புரூடசின்
பாய்ச்சினேனே, அதே
என் நாடு விரும்பினால்
மார்பிலும் செலுத்த
தும் தயங்க மாட்டேன்.
வாசகத்தோடு நான் உங்
விடைபெற்றுக் கொள்கி

* *

கவிமன்னன் சேக்ஷ்பி
டிய ஜூலியஸ் சீசர் என்
ளம் உருக்கும் காவியத்
பகுதி இது.

ஜூலியஸ், வெற்றிப
வீரன். ரோமாபுரி
வாழ்க்கையை சோர்வு
மும் கப்பிக்கொண்
வேளை அவன் அந்நாட்
யல் வானத்தில் விடி
எனத் தோன்றினான்.
வென மேலுயர்ந்து சென்
விரைவில் தனக்கு ஒ
மிக்காரும் அற்ற கதிரவ
ஒளி வீசினான். சீசர்,
மேல் தோல்வி கண்
ரோம் மக்களின் கவ

# புரூடஸ் உள்ளத்தில் போராட்டம்: சேக்ஷ்பியரின் உயிரோவியம்.

ர்த்து அவர்கள் உள்ளத்தில் ளிப்பெற்றினான்; வெற்றிபுரிப் பயணம் நடத்தி வந்தான் அடுத்தடுத்து. எதிரிகளை வீழ்த்தினான்; பகைவர் கோட்டத்தில் அச்சம் அரசோச்சச் செய்தான்; ரோமாபுரியைத் தலைநிமிர்ந்து நிற்கச் செய்தான்.

புரூடஸ், கண்ணியமே உருவாக வந்த ஓர் உத்தமன். வஞ்சம் பொய் சூது சூழ்ச்சி என்றின்ன சொற்களை அறியாதவன், என்றும் எவர்க்கும் தலைவணங்காத தீரன். சிறந்த பண்பு நலங்களின் இல்லம், அவன் உள்ளம்.

புரூடஸ், சீசருக்கு உற்ற துணைவனாகத்தான் இருந்தான் முதலில். உயிருக்குயிரான நேசனாகத்தான் இருந்தான்—முதலில் மட்டுமல்ல முடிவுவரை. ஆனாலும் சீசர், தான் பெற்ற வெற்றிகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டிலே **தனி மனிதன்** ஆட்சி எனும் கூடாரம் அடிக்கத் தொடங்கிவிட்டான் எனத் தெரிந்ததும் அவன் உள்ளம் வேதனைக் களமாக மாறிற்று.

சர்வாதிகார மனப்பான்மை ஏற்பட்டுவிட்டது சீசருக்கு. விடுதலை வீரனான புரூடஸ் இதை ஒப்பவில்லை. ஆனால் சீசரோ அவன் உயிர்த்தோழன். என் செய்வான் புரூடஸ், நெஞ்சம் கலங்கினான்.

சீசர் வேண்டுமானால், மக்கள் ஆட்சி என்ற இன்பொருளை இழக்கவேண்டும். மக்கள் ஆட்சி வேண்டுமானால் சீசர் என்ற உயிர்த் தோழனை இழக்கவேண்டும். எதை இழப்பது? சீசரையா? மக்கள் ஆட்சியையா?

**காதல்**, "புரூடஸே! சீசரை இழக்காதே" என்று கூறிற்று. **கடமை**, "நாட்டை மறந்துவிடாதே புரூடஸ்" என்று மெல்லிய குரலில் ஆனால் உறுதியான முறையில் சொல்லிற்று.

காதலை ஏற்றால் கடமையை மறக்கவேண்டும். கடமையை முடித்தால் காதலை இழக்கவேண்டும். என்ன துர்ப்பாக்கியமான நிலை!

புரூடஸ் இருதலைக் கொள்ளி எறும்பு ஆனான். செய்வதறியாது திகைத்தான்.

கடமை, காதல், இரண்டும் அவனைத் தத்தம் பக்கம் இழுத்தன. இரண்டிலே எதை விடுவான் அவன்? சீசரையா, தன்னை ஈன்றெடுத்த திருநாட்டையா, எதை இழப்பான் அவன்?

இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தான். கடமையை ஏற்றான். காதலை மறந்தான். சீசரைக் கொன்றான்.

காஸ்ஸியஸ், சின்னா, காஸ்கா மற்றும் பலர் புடை சூழ திடீரென்று சீசர்மீது பாய்ந்து கொன்றான் புரூடஸ். காஸ்ஸியஸ், சின்னா, காஸ்கா போன்றவர்கள் தன்மீது வாள் பாய்ச்சுகிறார்கள் என்பதைக் கண்டு சீசர் கொஞ்சம் திமிறிப் பார்த்தான், அவர்கள் பிடியிலிருந்து தப்ப. ஆனால் கொலைஞர் குழுவிலே தன் அருமை நண்பன் புரூடசும் இருக்கக் கண்டதும் சீசர் உடைந்த உள்ளத்தன் ஆனான், எதிர்ப்பு முயற்சியைக் கைவிட்டான். **நீ கூடவா புரூடஸ்! அப்படியானால் சீசர்! நீ செத்தே போ** என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு கீழே சாய்ந்தான்; மாண்டான்.

புரூடஸ்—சீசர் நட்பு அவ்வளவு ஆழமானதாய்த்தான் இருந்தது. ஆனாலும், புரூடஸ், கடமைக்காக நட்பைத் தத்தம் செய்தான்; நண்பனைக் கொன்றான்; நாட்டை வாழ்த்தினான்.

காதல்! கடமை! இரண்டிற்குமிடையே போராட்டம் எழுந்தது. எழுந்த போராட்டத்தில், காதல் வீழ்ந்தது. கடமை வென்றது. புரூடசின் வாழ்க்கையை சேக்ஷ்பியர் சித்தரித்த விதம் இது.

* * *

**காதலா? கடமையா?** இதே கேள்வி, இன்று, இந்தியத் துணைக் கண்டத்தில், முற்போக்கான நினைப்பு கொண்ட பலர் உள்ளத்தில் ஊசலாடுகிறது.

காங்கிரஸ், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திற்காக அமைக்கப்பட்டதோர் முன்னணி. இந்தியாவில் கால் ஊன்றிவிட்ட பரங்கியர் ஆட்சியை ஒழித்துக் கட்டுவது என்ற ஓர் இலட்சியச் சரடு, பல்வேறு நினைப்பும் நோக்கும் போக்கும் படைத்த பற்பல நிலையினரையும் ஒன்று சேர்த்தது. "வெள்ளையனே, வெளியேறு!" என்ற வீர முழக்கம் எழுப்புவதற்காக அவர்கள் அனைவரும் தத்தமக்கு என்றிருந்த பல தனிப்பட்ட கொள்கைகளையும் இலட்சியங்களையும் மறந்து ஓரே மேடையில் நின்று ஓரே குரலில் பேசி வந்தனர். வேற்றார் ஆதிக்கத்தை ஒழிப்பதற்காக பஜாஜ்கள் வீற்றிருந்த அதே மன்றத்தில் ஜெயப்பிரகாஷ் நாராயணர்களும் வீற்றிருந்தனர். அதே காரணத்தால்தான் படேல்கள் சர்வாதிகார மந்திரக் கோலைச் சுழற்றிக்கொண்டிருந்த ஓர் அரசியல் அரங்கிலேயே திரு. வி. கலியாணசுந்தரனார்களின் பாசமும் பற்றும்கூட நடமாட

# தேசிய காங்கிரஸ், பிர்லாக்களின் தாழ்வாரத்தில்!

முடிந்தது; கைராட்டை இருந்த இடத்திலேயே காரல் மார்க்சின் தத்துவங்களும் இருக்க முடிந்தது. அன்றே கூட திராவிடர் இயக்கம் போன்ற பல முற்போக்குச் சக்திகள் காங்கிரஸ் அமைப்புக்கு வெளியே இருந்து உரிமைப் போராட்டத்தை நடத்திவந்தன; நாட்டிலே இருந்து வந்த நானாவிதமான ஊழல்களையும் சுட்டிக்காட்டித் திருத்திவந்தன. ஆனால் வேறு பலர்—உதாரணமாக ஜெயப் பிரகாஷ் போன்ற சோஷிபலிஸ்டுகள்—காங்கிரசுக்கு உள்ளிருந்தே ஏகாதிபத்திய எதிர்ப்பு போர் நடத்த எண்ணினர். நடத்தியும் வந்தனர்.

காங்கிரஸ் போராட்டம், பிற பல இயக்கங்களின் எழுச்சி, சர்வ தேசிய நெருக்கடி, உலக மன்றத்தின் சூழ்நிலை, இங்கிலாந்தில் தொழிற் கட்சியின் தேர்தல் அறிக்கை போன்ற பல காரணங்களால் இந்தியாவை ஆட்டிப் படைத்துவந்த வெள்ளை ஏகாதிபத்தியம் சென்ற ஆண்டு சரிந்தது.

முன்னரே காங்கிரசில் போராதிக்கம் வகித்து வந்த பிற்போக்குச் சக்திகள், அதன்பின், மேலும் மேலும் வலுப் பெற்றுவிட்டன. வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு முனைகளில், தனித் தனியே துண்டுபட்டுக் கிடந்த பெரிய பெரிய பணமூட்டைகளும், இருட்டுச் சந்தை எத்தர்களும், உழைப்பவர் குருதியில் குதித்துக் கூத்தாடும் உலுத்தர்களும், மனிதர் உணவைத் தட்டிப் பறிக்கும் ஈவு இரக்கமற்ற நிலப் பிரபுத்துவ அட்டைகளும் உருண்டோடி வந்தன காங்கிரசை நோக்கி. மிக விரைவில் காங்கிரசைக் கைப்பற்றியும் விட்டன.

ஜமீன்கள், மிட்டாக்கள், மிராசுகள், சரிகைத் தலைகள், விசிறி மடிப்புகள், சில்க் ஜிப்பாக்கள், சாய்வு நாற்காலிகள், ரோல்ஸ் ராய்ஸ்கள், ஹிந்துஸ்தான் 10கள் ஒவ்வொன்றாகவந்து சேர்ந்தன காங்கிரஸில். நாளுக்குநாள் அவர்களின் ஆதிக்கம் காங்கிரசில், வளர்ந்து வளர்ந்து, இன்று, அந்த வட்டாரத்தில் அவர்கள் 'அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும்' பரம்பொருளாகவே மாறிவிட்டனர்.

காங்கிரஸ், பிர்லாக்களின் தாழ்வாரத்தில் தவழ்கிறது இன்று.

சர்ச்சிலையும் அமெரியையும் ஜெட்லண்டையும் லின்லித்கோவையும் ஆட்டிப் படைத்த தேசிய இயக்கம் இன்று டாடாக்கள்—டால்மியாக்கள்—கோயங்காக்கள்—அல்லாடிகள் போன்றோர் ஆட்டும் சுட்டு விரல் கண்டு தகதகவென ஆடுகிறது.

ஏழை என்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில் என்று பண் பாடிய காங்கிரஸ் குரல், இன்று, உற்பத்தியைக் கெடுக்காதே—வேலை நிறுத்தம் செய்யாதே என்று முதலாளித்வ சரளி வாசிக்கிறது.

மாகாண சுய ஆட்சி வேண்டும் என்று உரத்த குரலில் ஊரறியப் பேசிய காலம் போய், காங்கிரஸ், "மாகாண ஆட்சியா? மத்திய ஆட்சி அழிவதா? குறுகிய புத்தியாச்சே! கூடாதே தம்பி இது" என்று விபரீத வாதம் புரியத் தொடங்கிவிட்டது.

'உழைப்பவரே, உத்தமரே, ஆலைத் தொழில் தோழர்களே, உழவர்களே, மாணவர்களே, இளைஞர்களே, புத்துலகச் சிற்பிகளே, 'நவ பாரதத்தை' உருவாக்க வந்த அன்னைமாரே, ஆசிரியரே, வழக்கறிஞரே, வாரீர் வாரீர்' என்று வருந்தி அழைத்த காலம் போய், கதவு திறந்தே இருக்கிறது—காங்கிரசை விட்டுப் போவார் எல்லாம் போகலாம். போகலாம் என்று 'தண்டோரா' போடும் காலம் பிறந்துவிட்டது.

ஜமீன்களை ஒழிப்போம், நிலவரியைக் குறைப்போம், வரிகளையே தொலைப்போம், தேனும் பாலும் நாடெங்கும் வழிந்தோடச் செய்வோம் என்றெல்லாம் வெண்கல நாத சங்கீதக் குரலில் எதுகைமோனை நயத்தோடு மேடைப்பேச்சு நிகழ்த்தி வந்த நீதிமான்கள் எல்லாம் இன்று "ஜமீன்களா—ஏராளமாக நஷ்டஈடு கொடு அவர்களுக்கு!", "வரிகளா—உயர்த்து மேலும் மேலும்", "உழவர்கள் போராட்டமா—மலபார் போலீசை அனுப்பு அதை அடக்க" "மாணவர்கள் கிளர்ச்சிதானே—நசுக்கு அதனை" என்ற தோரணையில் 'கர்ஜனை' புரிய முன்வந்துவிட்டனர்.

சோஷியலிஸ்டுகள் காங்கிரசில் இருப்பதைவிட வெளியேறிவிடுவதே நல்லது—**தேசிய காங்கிரசின் கூட்டுச் செயலாளர் சங்கர்ராவ் தேவ் அறிக்கை.**

தாமாகப் போகாவிட்டால் போகவேண்டிய வழி இது என்று சுட்டிக் காட்டவேண்டியிருக்கும் சோஷியலிஸ்டுகளுக்கு—**சர்தார் படேலின் வீர முழக்கம்.**

நாட்டின் தொழில் வளத்தை மிக விரைந்து உருவாக்கவேண்டிய இந் நாளில் வேலை நிறுத்தங்கள் பெருங்கேடு பயக்கும்.

**—காங்கிரஸ் செயற் குழுவினர் தீர்மானம்**

மூன்றாண்டுக் காலமேனும் உழைப்பாளிகள் எத்தகைய

# சிவஞானங்களே, சமதர்மிகளே, சிந்தித்துப் பாருங்கள்!

ளர்ச்சியிலும் ஈடுபடாமல் ருப்பதே முறை.

—பண்டித நேரு.

சோஷியலிஸ்டுகள் காங்கிர ர் திட்டத்திற்கும் நடைமுறை ம் மாறுபட நடப்பவர்கள்; வே அவர்கட்கு காங்கிரஸ் ங்கள் எதுவும் வரவேற்புச் பவதோ, கூட்டம் அமைத் கொடுப்பதோ, பிற சிறப்பு செய்வதோ கூடாது.

—காங்கிரஸ் சுற்றறிக்கை.

தொழிலாளிகள் நிலைமையை ர்ந்து நடந்து கொள்ளா டால் அவர்களை அடக்கு எப்படி என்பது சர்க்கா ருத் தெரியும்.

—படேல் பேச்சு.

மீந்தார்களுக்கு நஷ்ட ஈடு டுக்கக்கூடாது என்றெல் பேசுவது ஆபத்தானது. தார்கட்கு நஷ்ட ஈடு தர ப்பது கொள்ளையடிப்பதை இழிந்த செய்கை.

—மறுபடியும் படேல்.

வலை நிறுத்தம், வேலை நிறுத் என்றால் என்ன அர்த்தம்? ஜகத்தின் பல உருவங் ஒன்றுதானே அதுவும்?

—காந்தியார்

க்காளத்தில் நிறைவேறி பாதுகாப்புச் சட்டம் திமை நிலைநாட்ட அவசி தேவையானதே.

—ஜவகர்லால்

ந்திய தேசிய காங்கிரஸ் போகிற பாதை மார்க் பாதை அல்ல, முதலா வப் பாதை என்பதை இதுவே போதும்.

ந்தா முனிவர் மடாலயம் ருக்குக் காட்டும் 'புது உல திஉலகமல்ல, ஆண்டான் ம தத்துவத்தை அசையா லைநாட்டும் பழைய உல கமே என்பதை நிலைநாட்டவும் வேறு வாதம் தேவை இல்லை.

'இந்தியா,' பிற நாட்டார் முன்னிலையில் செம்மாந்து நிற்க வேண்டுமானால், அது பின்பற்ற வேண்டிய திட்டம் காந்தீயத் திட்டம் அல்ல என்பதை எடுத்துக் காட்டவும் சான்று வேறு வேண்டுவதில்லை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் இந் நாட்டு மன்னர் என்ற உயரிய இலட்சியம் நிறைவேற நாம் கையாளவேண்டிய போர்க்கருவி காங்கிரஸ் அல்ல. நிச்சயமாக அல்ல. ஏனெனில் அது, அந்த இலட்சியத்தையே தவிடுபொடி யாக்க எண்ணும் ஓர் அமைப்பு. யார் யார் சோஷலிச இலட்சியம் நிறைவேறினால் மனத்துயர் உறு வரோ, யார் யார் அந்த இலட் சியத்துக்கு நேர் விரோதிகளோ, யார் யார் சமுதாயத்திலே தனி உடைமையே கொடி கட்டி ஆள வேண்டுமென்று இதயபூர்வமாக ஆசைப்படுகிறார்களோ அவர்கள் கரத்திலே எல்லாம் சிக்கிச் சிதை கிறது அந்த இயக்கம்.

இதை, காங்கிரஸ் சமதர்மி கள் நன்றாக அறிவர். அறிந்துந் தான் அந்த அமைப்பிலிருந்து வெளியேறத் தயங்குகின்றனர். "வெளியேபோ" என்று திட்ட வட்டமாக அவர்களுக்குச் சொல்லப்பட்டுங்கூட வெளி யேறத் தயங்குகின்றனர்.

காரணம், "காதல்—கடமை" போராட்டம்தான்.

காங்கிரஸ், பலப்பல ஆண்டுக ளாக அவர்களுடைய உழைப் பால் உருவான ஓர் இயக்கம். அவர்களுடைய தியாக சிந்தனை, அஞ்சாத நெஞ்சம், இடையறா உழைப்பு, இணையற்ற தொண்டு இவை அத்தனையும் காங்கிரஸ் இயக்கத்தின் வளர்ச்சியிலும் செழிப்பிலும் இரண்டறக் கலந் திருக்கின்றன. எனவே காங் கிரஸ் மீது அவர்களுக்கு ஒரு பற்று, பாசம், நீங்காத அன்பு இருத்தல் இயற்கையே. காதல், அவர்களையும் காங்கிரசையும் இணைக்கிறது. அந்த இணைப் பிலே இருந்து தப்ப அவர்கள் உள்ளம் ஒப்பவில்லை.

ஆனால் அதே சமயம், "மக் கள் வாழ்வு மறுமலர்ச்சி பெறத் தானே காங்கிரசைக் கட்டி வளர்த்தோம்; இன்று அது மக் கள் நலனுக்கு மாறுபட்ட முறை யிலே செல்கிறதே; அதை எதிர்ப்பதுதானே முறை" என்ற கடமை உணர்ச்சி ஒரு புறம் அவர்கள் உள்ளத்தைத் தொட் டிழுக்கிறது.

காதல் ஒரு புறம்;
கடமை ஒரு புறம்.
அன்பு ஒரு புறம்;
நேர்வழி ஒரு புறம்.
நேசம் ஒரு பக்கம்;
நியாயம் எதிர்ப் பக்கம்.
ஜூலியஸ் ஒரு பக்கம்;
ரோம் எதிர்ப் பக்கம்.

இது புரூடசின் உள்ளத்திலே அன்று நிகழ்ந்த மனப்போராட் டம். இன்று காங்கிரஸ் சோஷ லிஸ்டுகள் புரூடசின் நிலையிலே தான் உள்ளனர்.

ரோமாபுரியின் எழுச்சி வேண்டுமானால் நண்பன் ஜூலி யஸ் சீசரை இழக்கவேண்டும். ஜூலியஸ் சீசர் வேண்டுமானால் ரோம் நாட்டை இழக்கவேண் டும். எதை இழப்பது என்று தெரியாமல் தவித்தான் புரூடஸ். இரண்டும் அவன் உயிருக்குயி ரான பொருள்!

இதோ காங்கிரஸ் சமதர்மி களும் அப்படித்தான் மக்களா, காங்கிரசா, எது முதன்மை என்

# முடிவு செய்யுங்கள்! முன்னேற வாருங்கள்!

மயக்கமும் தயக்கமும் நாட்டு நலி தீர்க்காது.

பது தெரியாது தத்தளிக்கின்றனர். நாம் சொல்லிவிடலாம் எளிதாக கட்சி அல்ல, நாடு தான் முக்கியம் என்று. ஆனால் அவர்கள் சொல்லிவிட முடியாது அவ்வளவு எளிதாக. ஏனெனில் நமக்கு காங்கிரசிடம் 'காதல்' இல்லை. மக்களுக்குச் செய்யவேண்டிய கடமை மட்டுமே நம் கண்முன் நிற்கிறது — ஆகவே நாம் சொல்லிவிடுகிறோம் காங்கிரஸ் அல்ல-மக்கள் முதன்மை என்று. அவர்கள் எப்படிச் சொல்லிவிட முடியும்? காதல் என்னும் வசீகர சக்தி காங்கிரசின் பக்கம் இழுக்கிறதே அவர்களை!

"அப்படியானால், காங்கிரசின் பக்கமே சாய்ந்து விடுவதுதானே அவர்கள்! திடீர் திடீரென்று காங்கிரஸ் முதலாளிகள் ஸ்தாபனம் என்று தாக்குகிறார்களே அது ஏன்?" என்று கேட்கத் தோன்றும் உங்களுக்கு. அதற்குக் காரணம் இதுதான்; அவர்களுக்கு, காங்கிரஸ் காதல் மட்டுமல்ல, மக்கள் ஆட்சி மாற வேண்டுமே என்ற கடமை உணர்ச்சியும் இருக்கிறது!

## இதோ ஜெயப்பிரகாஷ் நாராயண் பேசுவதைக் கேளுங்கள் :

'சோஷலிஸ்டுகள் காங்கிரசிலிருந்து விலகி எதிர்ப்புக் கட்சி அமைப்பார்களா அல்லது அதைப்பற்றி பேசிகொண்டே ஒரு முடிவுக்கும் வராமலிருப்பார்களா? இக் கேள்வி இன்று பலர் மனதை உறுத்தி வருகிறது. இதுபற்றிய **எனது ஸ்திரமற்ற போக்கு** பலராலும் குறை கூறப்படுகிறது.

"எனது நிலைமை பற்றி சில வார்த்தைகள். இப்பிரச்னையை முடிவு செய்வது கஷ்டமாயிருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். நண்பர்களும் எதிரிகளும் கேலி செய்வது நியாயமாய் இருந்த போதிலும் இதிலுள்ள என் கஷ்டத்தை அவர்கள் உள்ளவாறு உணர்ந்தார்களா என்று நான் ஆச்சரியப்படுகிறேன்.

"உண்மையிலேயே இப்பிரச்சினை சிக்கல் நிறைந்தது ஆகும்."

—[ஜனதா 25-1-48]

ஆம்! உண்மையிலேயே இப்பிரச்சினை சிக்கல்நிறைந்ததுதான். காதலா கடமையா என்ற பிரச்சினை சிக்கல் நிறைந்ததுதான்.

## மறுபடியும் ஜெயப்பிரகாஷ் :

"காங்கிரசின்மீது நம்பிக்கை இழந்து விட்டவர்களும் அதனுடைய வழியில் பொறுமை இழந்தவர்களும் என்னைக் கோபிப்பதற்கு இடம் ஏற்பட்டது இயற்கையே. ஆனால் காங்கிரசோடு நெருங்கிய தொடர்புள்ளவர்களுக்கு-- தங்களுடைய வாழ்நாளில் பெரும் பகுதியை அதன் சேவைக்கே அர்ப்பணித்திருக்கிறவர்களுக்கு [சோஷலிஸ்டுகளுக்கு] பொறுமையின்றி, காரியம் செய்ய சாத்தியமாயில்லை. மகாத்மாவிடமும் பண்டித நேருவிடமும் எங்களில் சிலர் கொண்டுள்ள அன்பும் மதிப்பும் மார்க்ஸ்

(3-ம் பக்கம் பார்க்க)

(12-ம் பக்கம் தொடர்ச்சி)

என்ன சூழ்ச்சி செய்தேனு
பாகிஸ்தானைத் தன்னே
இணைக்கவே இந்திய சர்க்க
எண்ணுகிறது என்று பாகிஸ்
னிகள் உள்ளத்தில் ஊரும் ச
சல மேகங்கள் கலைந்தொழ
வேண்டுமானால் இத்தகை
மொழிகளையே இந்திய அர
லார் கூறவேண்டும். இ
விட்டுவிட்டு, என்றைக்கிருந்
லும் பாகிஸ்தான், இந்தி
வுடன் சேரவே போகிற
பாகிஸ்தான் வேறு—இந்தி
வேறு அல்ல—இரண்டு
ஒன்றே; சட்டப்படி பாகி
தானும் இந்துஸ்தானும் பிரி
விட்டாலும் இரண்டும் தார்மீ
துறையில் (என்ன தா
கமோ!) ஒன்றே என்றெல்ல
இதுவரை படேல்களும் பிரச
களும் மகாத்மாக்களும் ம
பலரும் கூறிவந்தது வீண் வி
வுகளுக்கே அச்சாரம் தருவத
முடியும். 'இந்தியா'—பாகி
தான் இரண்டும் தனித்தனி
சுகள் என்று ஏற்பட்டுவி
பிற்பாடு, அந்த ஏற்பாட்டை
இரண்டு அரசியலாரும் ஒப்
கொண்ட பிற்பாடு, இர
அரசினர்க்கும் இரு வே
பாராளுமன்றங்களும் கவர்
ஜெனரல்களும் ஏற்பட்ட
பாடு இந்தியா எனும் உபக
டத்தை ஒரே நாடு என்று வா
கும் பழம் பாடத்தை விட்டு
வதே முறை. நவகாலிகளு
பஞ்சாப்களும் வங்காளங்க
பீகார்களும் மறுபடியும் மறு
யும் இந்தத் துணைக் கண்ட
அரசியல் வானில் வட்டமி
கூடாது எனில் இந்திய
சாங்கம் சென்று தீரவேண்
சரியான பாதை இதுவே.

# சிந்தனை அலைகள்

## ...ராமணு மமதேவதா !

இது வேத காலத்துப் பழமொழி. பிராமணரே பூதேவர் என்பது இதன் கருத்து. வேதம் ...வும், இதிகாசங்கள் பயில ...ம், உபநிஷத்தின் உட்பொருள் ...த்துவங்களை உணரவும், ...ணர்ந்ததைப் பிறர்க்கு உரைக்...வும், ஆய கலைகள் அறுபத்தி...ன்கினையும் கற்றுத் தெளிய ...ம் உரிமை படைத்தவர்கள் ...ராமணர்களே என்பது இதன் ...க்கம். க்ஷத்திரியரோ வைசி...ரா சூத்திரரோ எவராயினும் ..., அவர்க்கெல்லாம் இந்த ...தம் ஓதும் உரிமை இல்லை. ...ணம் பிரம தேவனின் முகத்...னின்று வந்தவர்கள் அல்ல ...ர்கள். அவன் தோளிலும் ...தொடையிலும் காலிலும் ...ந்து வந்தவர்கள். ஆகவே ...ர்கள் வேதம் ஓதக்கூடாது. ... ஓதினல் அவர்கள் நாக்கு ...ண்டிக்கப்படும். சூத்திரர்கள், ...ர்கூட்டம் வேதம் ஓதுதலை ...ருகிருந்து கேட்கவும் கூடாது. ...டால் அவர்கள் செவியில் ...திக்கும் ஈயக் குழம்பு ஊற்...படும்.

...தெல்லாம் பழங்கதை ...று சொல்லலாம் சில நவீன ...ரமாதித்தர்கள். என்னமோ ...டுமிராண்டிக் காலத்தில் ஏற்...தப்பட்ட பழக்க வழக்கங் ...என்று இவற்றை எள்ளி ...யாடலாம் சில 1948 கள். ...க் காலத்தில் இப்படியெல் ...நடக்க விடுவோமா நாங் ...எப்படியோ எங்கள் முன் ...கள் ஏமாந்து விட்டார்கள் ...தம் மீசையை முறுக்க ...சில வாலிபர்கள்.

...ர் என்ன சொன்னுலும் ..., கல் ...யிலும் உரிமையும் அதைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லும் உரிமையும் பிராமணரின் பிறப்புரிமையே தவிர வேறில்லை. பிறப்புரிமை மட்டும் அல்ல. அது அவர்களுடைய பரம்பரை உரிமைகூட.

இப்படியென்று எந்தப் பத்தாம் பசலி கூறினுன் என்று கேட்கத் தோன்றும் உங்களுக்கு. கொஞ்சம் மெள்ளப் பேசுங்கள், வங்காள கவர்னர் ஆச்சாரியாரின் காதில் உங்கள் கேள்வி விழுந்துவிடப் போகிறது!

சகிவோத்தம சர். சி. பி. இராமசாமி அய்யர், திருவாங்கூரில், தான் நடத்திவந்த ஏதேச்சாதிகார தர்பாருக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு விட்டதால் அமெரிக்காவிற்குப் புறப்பட்டார் சென்ற கிழமை, இந்து மத ஆச்சார அனுஷ்டான கலாச்சார மேன்மைகளை அங்குப் பரப்ப! கல்கத்தாவில் அவருக்கு ஒரு விருந்து வைக்கப்பட்டது. விருந்திலே பேசும்போது கவர்னர் ஆச்சாரியார் குறிப்பிட்டார், இந்தியாவின் கலாச்சாரத் தூதுவராக அமெரிக்கா செல்லத் தகுதியுடையவர் சர். சி. பி. ஒருவரே என்று.

காரணங்கள் என்ன தெரியுமா?

மூன்று என்கிறுர் ஆச்சாரியார்.

ஒன்று, சர். சி. பி. யின் அறிவுத்திறமை. மற்றொன்று அவருடைய பண்பாட்டின் உயர்வு. மூன்றுவது அவருடைய **பரம்பரை உரிமை!**

ஆச்சரியப் படாதீர்கள், ஆச்சாரியார்தான் பேசி இருக்கிறுர், கலைஞானம் பரப்புதற்குரிய பரம்பரை உரிமைபற்றி.

சர் சி. பி. பிராமணர்; பூதேவர்; பூசுரர்; முப்புரி தரித்தவர். ஆகவே பரம்பரை உரிமை உடையவர்.

இது வர்ணுஸ்ரம தர்மத்தின் அரிச்சுவடி. இந்த வர்ணுஸ்ரம தர்மந்தான் இந்து மதத்தின் அடிப்படை. இத்தகைய இந்து மதத்தில் நாம் இருக்கும் வரை பிராமணு மமதேவதா என்பதை ஒப்புக்கொண்டு தானே ஆகவேண்டும்! ஆச்சாரியார் சொல்கிறுரே என்று ஆயாசம் பட்டுப் பலன் என்ன? தேளுக்கு வாழ்க்கைப்பட்டால் விஷத்திற்கு ஒரு கொட்டு கொட்டத்தானே செய்யும்!

## சத்திய சாகர்—திடீர் மாற்றம்!

சென்னை ஜார்ஜ் டவுனுக்கு வீரத் தமிழன் வ. உ. சி. யின் பெயர் சூட்டப்பட வேண்டுமென்று தமிழகம் சென்ற ஆறு திங்களாய்க் கேட்டு வருகிறது.

சென்னையின் முக்கிய தெரு ஒன்றிற்கு குமரன் பெயர் இருத்தல் நன்று என்று பார்க் டவுன் மக்கள் இரண்டு திங்களாய்க் கிளர்ச்சி செய்து வருகின்றனர்.

இரண்டிற்கும் செவி சாய்ப்பார் எவரும் காணும்.

ஆனல், திடீரென்று, இந்த வாரம், சென்னை நகரசபை ஓர் அவசரக் கூட்டம் கூடி, பூண்டி நீர்த் தேக்கம் என்றுள்ள அழகிய தமிழ்ப் பெயரை, காலஞ்சென்ற சத்திய மூர்த்தி ஐயரின் நினைவாக, சத்ய சாகர் என்று மாற்றி இருக்கின்றனர்.

சத்ய சாகர் வேண்டுமென்று எவரும் கேட்கவில்லை. வ. உ. சி. நகர் வேண்டுமென்று தமிழகத்தில் உள்ள அரசியல் கழகங்கள் அத்தனையும் கேட்டன.

ஆனல் நகரசபை உடனே செய்து முடித்த காரியம் சத்ய

சாகர் என்ற அருவருப்பான சொற்றொடரை, பூண்டித் தேக்கம் என்ற இனிய தமிழ்ச்சொல் இருந்த இடத்தில், நுழைத்தது தான். சிதம்பரனார் நகர் என்று பெயர் சூட்டியதல்ல ! காரணம் என்ன ?

சத்யமூர்த்தி ஆரியர். வ. உ. சி. திராவிடர்.

ஆரியமாவது திராவிடமாவது என்று பேசுகிற அதிமேதாவிகளின் சிந்தனைக்குத் தீனி இந்தச்சிறு நிகழ்ச்சி. 'மேதாவிகள், சிந்திக்கட்டும்.

## காட்டிக் கொடாதீர்! ஊர் அலர் தூற்றும்!

கோவையில் ஆயிரமாயிரம் மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர். காரணம், பல ஆயிரம் தொழிலாளர்கள் வேலையைவிட்டு நிறுத்தப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதே. உணவுப் பஞ்சமும் உடைப் பஞ்சமும் உறைவிடப் பஞ்சமும் பிறவும் பிறவும் உழைப்பவர் உள்ளத்தில் வேதனைப் புயலை எழுப்பிவரும் இந்நாளில், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் கொடுமை போல, வருகிறது இச்சேதி எனில் எவர் தாம் பொறுப்பர் இது கேட்டு? பொறுக்க முடியாது இக் கொடுமையினை என்று கூறிவிட்டனர் கோவை பஞ்சாலைத் தொழிலாளிகள். ஆகா! அப்படியும் சொல்லல் ஆச்சுதோ! வேலை நிறுத்தமும் நடத்தல் ஆகுமோ என்று உறுமுகிறது ஓமாந்தூர் ஆட்சி. தொழிலாளர்கள் செய்யும் காரியம் உற்பத்தியைக் கெடுக்கும்—ஆகவே எங்கள் அநுதாபம் அவர்களுக்கு இருக்காது என்று அறிக்கையும் தந்துள்ளனர் ஆளவந்தார்கள். எங்கள் துணை தங்கள் பங்கில் என்று எண்ணினல் தொழிலாளிகள் ஏமாந்து போவார்கள் என்றும் கூறுகிறது ஆட்சிக் குழுவினர் அறிக்கை.

இதைச் சொல்ல ஓர் அறிக்கை தேவையா? இது என்ன நாடறியாத இரகசியமா? தொழிலாளிகள் அறிவரே நன்றாக இதனை!

பக்கிங்காம் கர்னடிக் மில் தொழிலாளர்கள்மீது தடியடி வீச்சு நிகழ்த்திய அரசியலார்—அச்சம் தயை தாட்சண்ணியமின்றி தாய்மார் ஊர்வலத்திலும் கண்ணீர்ப் புகை பாய்ச்சிய காருண்ணிய சர்க்கார்—மதுரை ஆசிரியர்களின் நேர்மையான கோரிக்கைகளை மட்டந்தட்டிய 'மகராஜர் சர்க்கார்'—என். ஜி. ஓ. க்களை பதைக்கப் பதைக்கப் பழி வாங்கிய பண்புடைய சர்க்கார் தங்கட்கும் அதே பரிசுகளைத்தான் வழங்குவர் என்பதை அறியாமலா இருப்பர் கோவைத் தோழர்கள் ?

அறிவர், நன்றாக அறிவர். எத்தகைய ஐயப்பாட்டிற்கும் இடமின்றி திட்ட வட்டமாக அறிவர். அறிவர்; ஆனால் அதற்காக வேலை நிறுத்தத்தை நிறுத்தி விடமாட்டார்கள். ஏனெனில் அவர்கள், சென்னை ஆட்சியினர் தம்மை ஆதரிக்கமாட்டார்கள் என்பதை மட்டுமல்ல; பசியின் கொடுமை எத்தகையது என்பதையும் அறிந்திருக்கிறார்கள். ஓமந்தூராரின் தாக்கீதுக்கோ மேட்டுக் குடியினரின் முணுமுணுப்புக்கோ நீதி மன்றங்களின் தீர்ப்புக்கோகூட அஞ்சும் பண்பு 'பசி'க்கு இல்லை என்பதையும் அறிந்திருக்கிறார்கள். வறுமையின் நச்சுப் பல் எவ்வளவு வேதனை தருவது என்பதையும் அறிந்திருக்கிறார்கள். ஆகவேதான் போராட்ட முன்னணி அமைத்திருக்கிறார்கள், 'தேசீய சர்க்கார்' முதலாளிகளின் பக்கமே இருக்… என்பது தெரிந்துங்கூட.

ஆளவந்தோரே! அமைச்… குழுவினரே! பழனியா… வன் பக்தர் எனப் பெயர்… முதல் அமைச்சரே! மதத்… வேலி கட்டி பகுத்தறிவு… லவனிடமிருந்து அதைக் கா… வந்த அவினசியாரே! அரு… தலைவர் எனக்கு ராஜா… எனக் 'கவிபாடிக் கவி… காலங் கழிக்கும்' உள்… டமைச்சரே! மராமத்து ம… ரியே! எல்லோருக்கும் … வார்த்தை. கோவைத் தொ… லாளரைக் காட்டிக் கொடா… படேலிசத்தைப் பின்பற்று… தென்னாட்டுப் பிர்லாக்களு… உற்ற துணை புரியாதீர்! கோ… யில் உலவும் குட்டிக் குபே… ளுக்கு கைலாகு கொடுக்கா… பாட்டாளிகளின் வியர்வை, … ணீர், குருதி, கஷ்ட நஷ்… இவற்றின் விளைவுதான் … றைய நும் அமைச்சர் கு… அந்தப் பாட்டாளிகளுக்… துரோகம் நினையாதீர். … சில் நிறுத்துவீர்: "ஏ… அழுத கண்ணீர் கூரிய வ… ஒக்கும்."

## சரியான பாதை

"பாகிஸ்தானை முன்… இனி நான் இந்தியாவு… சேர்ந்துவிடுகிறேன் எ… சொன்னாலும் நான் ஒ… கொள்ளமாட்டேன். … சுமக்கவேண்டிய மூட்டை… (பிரச்சினைகள்) இப்போ… ஏராளமாக உள்ளன. … ரோடு பாகிஸ்தான் மூட்டை… யும் சேர்ந்து சுமப்பதெ… இனி முடியாத காரியம்."

—அலகாபாத் … சென்ற கிழமை செ… இது. இந்த மொழி… வழியே சரியான…

(10-ம் பக்கம் பார்க்க)

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar …
… Madras. Joint Editor. M. Ilanchelvan B.A. …